ஓம்

கதிர்காமக் கடவுள் பேரில் பாடிய

# முருகானந்த கீதம்



இஃது

ஆசிரமம்

தமிழ் வித்வான் அ. தருமவிநாயகம் பிள்ளை
அவர்களின் பௌத்திரன்

கோட்டாறு

சோ. சிவகாமிநாதனால்

இயற்றப்பட்டது.

ஷையார் அனுமதிப்படி

ஆர். எம். சோமசுந்தரம் அவர்களால்

கொழும்பு ஸ்டான்லி பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1929 [அணா 2.

காப்பிரைட் ரெஜிஸ்டர்



கோட்டாறு,
சோ. சிவகாமி நாதன்.

A. ALAGACONE
HUSKISION STREET
TRINCOMALEE

# முகவுரை.

அநாதி மலமுத்த சித்துருவாகிய சிவபிரான் ஆன்மகோடிகளுய்யுமாறு எழுந்தருளியிராநின்ற திருகோணமலை, திருக்கேதீச்சுரம், சிவனொளிபாதமுதலிய சிவஸ்தலங்களை தன்னகத்தேகொண்ட இவ்வீழநாட்டின் தக்ஷணத்திலே அருணகிரி நாதசுவாமி களால் திருப்புகழ் பாடப்பெற்றதும், தேவாதியரில் முதன்மையாய் விளங்குபவனும், தந்தைக்கு பிரணவத்தை உபதேசித்தவனும் காமம் எனும் அகங்காரத்தை கதிர் எனும்ஜோதியால் நீக்குபவனும், ஆகிய எம்பிரான்; தம்மைவந்து வணங்கும் அடியார்களின் அஞ்ஞான இருளை நீக்கி மெஞ்ஞான ஒளியை ஈயுமாறு எழுந்தருளியிரா நின்ற கதிர்காமக்ஷேத்திரத்தின் கண் விளங்கும் கலியுக வாதராகிய முருகவேளின் மீதுற்ற அருளானந்தம் பூண்டு முருகானந்த கீதமெனும் நூல் இயற்றியுளேன். இந்நூலில் யாதானும் பிழையிருப்பின் குற்றம் நீக்கி குணத்தை உட்கொண்டு ஆனந்திக்கவேண்டுமெனக் கோரும் முருகக்கடவுளின்

அடியார்க்கடியேன்,

சோ. சிவகாமிநாதன்,

கோட்டாறு.

12-6-29.

இன்னூலை அச்சுவாகனமேற்றி அன்போடளித்த எமது நண்பர் R. M. சோமசுந்தரம் அவர்களின் நன்றிமறக்கற்பாலது.

ஓம்

திருச்சிற்றம்பலம்.

# முருகானந்த கீதம்

விநாயகர் துதி.

சித்தர் கணம் போற்றும் சிவ தேசிகன் கதிரை நகர்
வித்தகன்மேல் விருப்புடன்யான்—பத்திமையாய்
முத்தாரம் போலும் மூதம்சேர் சொல் கவிபாட
மத்தகஜமா முகனே துணை.

விருத்தம்.

திருமணியாம் தினந்தொண்டர் நினைந்துருகி உளமகிழும்
குருமணியாம் குறுமுனிக்கருள் சுரந்த குமரனெனும்
கருமணியாம் கருணைநிறை கதிரைநகர்க் கதிபனெனும்
அருமணியாம் அனவரதம் அஞ்சலிசெய் அவையகத்தே.

1 (குமரனே உன் அருமைபேச என்ற மெட்டு.)

பல்லவி.

முருகனே நின் பெருமைபேச
வருக நாவினில் விஸ்வாச (மு)

அனு பல்லவி.

மருகனே மால்கானில் வாசா
அமரேசனின் மருகா ஈசா (மு

தொகையறா.

தத்தை உருக்கொண்டு தஞ்சமென வந்த
அருணகிரிக்குகந்த ஐயனே
முத்துகுமரா சத்திமகிழ் புத்திர ஒய்யாரா
பன்னீர் கையனே.

பாட்டு.

வள்ளிக்குகந்த நாதா புள்ளிமயிலேறும் பாதா
விகசித நடமிடு மயிலோடு—அகமகிழ்ந்தடிமையின் முன்னன்போடு(மு

தொகையறா.

பவசாகரமெனும் பந்தமது அடியேனை
பற்றிடாமல் அருள் குகனே
சிவகாமி நாதனெனும் சிறியேன்
தமிழ்க்கிரங்கி சிந்தைவைத்திடு ஷண்முகனே.

பாட்டு.

வானவர் புகழும் தீரா கானவர் குலத்து வீரா
தானவர் கருமா னிலத்தினில் வேறற அழித் திட்ட ஒய்யாரா(மு)

2 (முருகனிடம் முறை சொல்வாய் என்றமெட்டு)

கந்தனிடம் என் கதிசொல்வாய் மயிலே மயிலே மயிலே (கந்)
களங்கமற விளங்கு திரு
பழங்கதிரை மலைவள நகர் (கந்)
கருத்தினில் உனைத்தினம் இருத்தியே
திருத்திய அனைத்தையும் குகனெனும் (கந்)
சற்றாகிலும் கடைக்கண்ணால்
உற்றாகிலும் பார்க்கவென (கந்)
கதிரைநகர் வளர்தனில் உறையுறுமுக
சரவண பவகுகனெனும் அந்த (கந்)

சரணம்.

எந்தைஎனும் நீவாளாய் சிந்தைதிரும்பாததுவும்
விந்தையென்றே மேவியே நான் சந்ததமும் சொல்லியதாய்
பந்தபாசமெனும் பெருமாயவலை
நத்திடாமல்—இத்தருணம்
முத்திகொடு—குறத்தியொடென (கந்)
நாள் பலகழிந்தும பாழ்மனம் வருந்தும்
நம்பிய தொண்டனும் வெம்பியழுந்தம்படி
வேள்வி மலைக்கண்வீற்றிருப்போனே உன்
நெஞ்சம் வஞ்சமோ தஞ்சநீ
கெஞ்சும் பஞ்சைக் கிரங்கிநீ
கொடைமடை திறந்திவ்வேளை
மிடியகர் உவந்திவ்வேழை
கூறும் சிவகாமி தமிழ் சேர்முகம்வை வேல்முருகாவென (கந்)

—o—

3 (பறந்துவா மயிலே என்ற மெட்டு.)

கருணைதா முருகா கண்ணன் மருகா க
கதிவேறிலை இக்காலையில் அதிதீவிர நடமிடு மயிலேறி க
பாலன் சிவகாமி தமிழ் பாடிட சுவாதியருள் க
வையாபுரி—யமர்ந்திடும் அய்யா
ஈராறுகையா—துய்யா இதுதரி க
திருப்பரங்குன்றில் வளர் வேலா தினம் தினம்
திருப்புகழ்ப் பிரியப் பிரபு சீலா அருணகிரி
விருப்புடன் புகழ்ந்த அரன் பாலா திருமுருகா க
புண்யா—சுவசுப்ரமண்யா சத்திமகிழ்
கண்யா—உன்னிய என்முன் க
அண்ணமலை தனில் வளரும் குமரா பக்தன் செட்டி
அண்ணமலை தொழும் சித்ரமயூரா துணைபுரிவாய்
அண்ணஎன அணைவள்ளி வீரா கரிவரவே க

4 இந்துஸ்தான்.ச் ச்சண்

லங்கைமாநகர்சங்கை என்றமெட்டு

1 வானவர்தொழும் கானமாமயில்
ஞானதேசிகனே முருகனே
ஏனலாசையாய் கானிலெதிரிந்
தோனேவாகுகனே முருகனே வா
2 செந்தூர்வாசனே கந்தநாதனே
ஆசிதாசண்முகனே முருகனே
மைந்தநானுமே நொந்துபாடினேன்
பாசரைகுகனே முருகனே வா
3 அரவணையான் மகிழ்மருகனேஉயர்
அற்புதமணியே முருகனே
சரவணபவனே அரன்புகழ்மகனே
சற்குருமணியே முருகனே வா
4 குறவர்மாதுடன் அறவர்மாதுமே
குலாவியகையனே முருகனே
மறலியான் வரமறுகவிட்டிடா
திருவருள் அய்யனே முருகனே வா
5 சிங்கமாமுகத்தானவன் தனை
பங்கமாக்கியோனே முருகனே
சங்கரன்முனம்சதுமுகன் தனை
சிக்கமாக்கியோனே முருகனே வா
6 மழலைகள்செயும் மனைகள்போலவே
மாபெரும்புவியினில் முருகனே
குழவியான்செய்தகுறையை நீக்கவாய்
கூரியதமிழினில் முருகனே வா
7 கதிரைப்பதியா கதிபுரிமுருகா
கார்த்திகேயக்குமரா முருகனே
மதுரக்கவிதா மாயோன்மருகா
மரகதமயில்வீரா முருகனே வா
8 ஆலகாலமுண்ட நீலகண்டன்மகிழ்
வேலாயுதக்கையா முருகனே
பாலன்சிவகாமிநாதனும்பாட
படிமீதருள்அய்யா முருகனே வா

—o—

5 (வரமருள்வாய் குறவள்ளிமணாளா என்ற மெட்டு)

கண்ணிகள்

1 கதிபுரிவாய்கதிரை—பதியுறைவோனே
பதியுறைவோனே—மதியணிந்தோன் மகனே (க)

2 கந்தப்பாகொடி—காவடிகளாடி
செந்தப்பாவின்பந்தரும்—சோலைமலைநாடி (க)

3 ஏனோஇவ்வர்மம்—ஏற்குமோதர்மம்
தானோமுன்னென்கருமம்—தவிர்த்துரைப்பாய்மர்மம் (க)

4 கும்பமுனிக்கன்றருளை—அன்புடனீந்தவா
அம்பிகையின்நல்லருளை—இன்பமாய்சார்ந்தவா

5 வஞ்சமேன்மால்மருகா—ரஞ்சிதவேல்முருகா
கொஞ்சிடஇதுததி வாவாபாலஷண்முகா

6 கதிர்காமவாசா—கெதியில்லைஈசா
எதிருரைபகர்நேசா—ஏழையான்குமரேசா

7 பாலாபிஷேகனே—வேலாயுதாகுகனே
பாலன்சிவகாமிஞதன்—பாடும்தமிழுக்கமைவோனே (க)

———

## 6 (கலிலோஹரிஸ்—என்ற மெட்டு)

### பல்லவி.

1 கதிர்காமனே—உனதிருபதமலர்
கனவிலும்மறவேனே சண்முகனே க
அதீதம்அனவரதமுனது
அடிகளில்சேர்குகனே சண்முகனே க

எல்லா அடிகளும் பல்லவிபோல் பாடவும்

2 நாலாவித நடமிடுமயிலுறை
வேலாயுதகுகனே சண்முகனே
பாலாபிஷேக முருகனே
கோலாகலப்பிரியனே சண்முகனே க

3 அருணபுரி தனிலுறைசரவண
பவனெனும் முருகோனே சண்முகனே
கருணைகரா விதரணகுணமிகு
கார்த்திகேயக்குகனே சண்முகனே க

4 சலியாதுனதடிமலரிணையினை
தமியெனுக்கேகீதா சண்முனே
கலியாமெனும பெருமிடிவிட்டகல
கதிபுரிஞானவேதா சண்முனே க

5 குறமாமகன் கொஞ்சிடும் பஞ்சணை
ரஞ்சித மால்மருகா சண்முகனே
சிறியேன்சிவகாமிதமிழின் சுவை
துதித்திடும் வேல்முருகா சண்முனே க

———

7 (பழனிநாதன்—என்றமெட்டு.)

கதிரை நாதன் அதிவினோதன் க
கா மாக்ஷி கடாக்ஷனும் க

மகுடங்கள்.

கார்த்திகேயன் எனவருகன
நேர்த்தியான சிகிவாகன க
நேமிநாதன் மருகனை
காமதகனன் மகவுமான க
தருண அருண கிரியின் முன்னே
வருணைக்கின்பக் கருணையான க
வடிவேலன படிமீதினில்
மிடியேகுமெ துடிகாணுமே க
படிமேலடியேன் உன்பதம்
பாடிடவருளாயா நிதம் க
தக்கமிக்க வரங்கொண்ட
அக்கனேறும அருள்பூண்ட க
குறக்குலத் தவர்த்துதி
அறக்கொடித் தவப்பிரபு க
பச்சை மயிலேறுமுருகா வெனவோடும்
இச்சைப்படியேதருவான் நாளுமேகைகூடும் க

சரணம்

காலை மாலை சதாக சிந்துருகிப்பண்
கழறும் மைந்தன் சிவகாமி நாதன்
கருதிய வேதன் குண நீதன் க

8 (வானவர் தொழும்)

(சித்தானந்தாகுகா—என்றமெட்டு)

பல்லவி

சந்தாவந்தாளிப்போது கதிவேறிலை
இவ்வேளை கவலைதீர் இவ்வேழை
கருதினேன் உனதாளை

அனுபல்லவி.

மைந்தாசிவன் மகிழப்போது
மர்மம் உரைத்தாயேஓது
மைந்தன்மேலா நீவாது
வாதிப்பதும் ஆகாது

மகுடங்கள்

இதுதநிவிகஜிதமயிலெறி கந்

இருமருங்கிலும் எந்தாய்களோடு
திருவருள்புரி மைந்தனையள்போடு

அருணகிரியின் அன்பனே
நம்பினேன் கந்

கார்ப்பதுஉன்கடனிலையா
மனம்வல்லையா
பெருந்தொல்லையா
பதில்சொல்லையா கந்

தொகையறா

அமரர்அனுதினம் அன்பொடுதுதிசெய்
ஆனந்தவேல் முருகனென்ற
குமாரகுருபரா குகனெனும்அறுமுகா
குழந்தையாம் அம்மைஉமையின்

பாட்டு

சரவணபவமால் மருகனே
பிரணவசொரூபமுருகனே
சந்ததம்சிந்தையில் எண்ணிடும்நேயன்
மைந்தன்சிவகாமிநாதனுன்சேயன் கந்

—O—

9 (தொண்டர்படையுண்டுசெய்த—என்ற மெட்டு)

1 புத்திகெட்டலையாதே என்மனமே நல்
உத்தமனைத்தேடு இத்தினமே அவர்
சத்தியுமைபெற்றெடுத்தனமே நீ
நத்திடில்ஜெயம்பெறுவாயிக்கணமே பு

2 கந்தனெனும் மெய்பொருளைநாடு இந்த
பந்தமெனும் மாய்கையைவிட்டோடு நல்
சுந்தரனே காற்றடைத்தகூடு
சொந்தமல்ல நற்சுகத்தைதேடு இது பு

3 எத்தனைபேர் பிறந்திறந்து மாண்டார் பின்
எத்தனைபேர் இப்புவியையாண்டார் அவர்
பித்தன்மகவெனப் பெயர்பூண்டார் ஆனால்
சத்தியம்உனக்கு துணையீண்டார் பு

4 கானக்குறவள்ளி மகிழ்லோலன் அவர்
வானவர்தினந் தொழுசுபாலன் அவர்
தானவர்கருவறுத்தகாலன் அவர்
ஞானபண்டிதனெனும் வேலன் பு

5 மலைச்சாரலிலேயவர் வாசம் இன்றேல்
அலைகடலோரமவர்நேசம் இன்றேல்
உலைமெழுகுபோலாம்நாசம் இவ்வூன்று
தலைக்கைவிடாதே மோசம் பு

6 சிவகாமிநாதனுரைவாக்கும் மன
சிந்தையில்லை நல்வழியிலாக்கும் அது
பவக்கடல்தன்னையுமே—நீக்கும் இந்த
பாரினிலேயாவருக்கும் ஏற்கும் பு

—·—

10 (ஆதாரமெனைக்கார்—என்ற மெட்டு)

பல்லவி

1 பேயானமனமே—பேதக்கதனமே
காமவிகாரமே—கனவிலும்மறவாத பே

அனுபல்லவி

2 நாயே நீ நினையாதே
நமனுக்கிரையாய்ச் செல்லாதே
ஓயாமல்ப் பொன்னம்பலன்மீதே
உருகிடபஜனைகள் செய்வாய்மனதே பே

சரணம்

காற்றில்பொதிந்த நிலையற்றபாண்டம்
ஏற்றுதிரிந்தால் இழிநரகமீண்டும்
வெற்றிக்கொடியோன் அடிபணியவேண்டும்
பற்றிடநற்சுகமதவே தூண்டும் பே

2 வீழாநரகிற் வீழ்வார்பாரு
வீழ்ந்தம்கரைதனில் சேரார்சேரு
தாழ்வார்படுகுழி தப்பாதுகூறு
தாளடிபணிபொன்னம்பலன் சீரு பே

3 கன்னியர்மாயவலை சிக்காதே
உன்னியேபார் நரகம்தப்பாதே
பன்னீர்கையனின் அடிமறவாதே
கண்ணீர்வடித்து வாய்புலம்பாதே பே

4 வாணாளெல்லாம் வீணாய்போக்கி
பேணார்உலகிற்பெருமைநோக்கி
காணார்பொய்வஞ்சகமேதாக்கி
பூணார்உயிரைநமனுக்காக்கி பே

5 ஓடிஉழைத்ததனங்கள் எங்கே
மாடிவீடுமனைகளும் இங்கே
கூடிக்கலந்திடும் காதலிஎங்கே

6 காலன்வருமுன் கருத்ததைதீட்டி
வேலன்பதமுன் இருகரங்கூட்டி
நாலாவிதநடமிடுமயிலோட்டி
பாலாபிஷேகங்காணவழிகாட்டி பே

7 முன்னோர்வார்த்தைகள் முழுவதுநம்பு
கன்னல்மொழிமடவார்பெருவம்பு
இன்னல்பலவிழை இவரிடையன்பு
சொன்னேன் பன்முறைதொடர்பாய்முன்பு பே

8 கயல்விழிமாதர் கருத்தினுட்பட்டு
அயலூர்வழிதனிலலைவதைவிட்டு
முயல்வதுநலமெனமுன்னோருரைகேட்டு
இயல்பெனஇசைத்தார் இன்னிசைபாட்டு பே

8 கோட்டாற்நகரதில் மேவியதாசன்
குகனடிமறவா சிந்தைவிஸ்வாசன்
நாட்டார்புகழ்மிகு சிவகாமிநேசன்
நாடியபடியருள்புரிவான்ஈசன் பே

## முருகானந்தகீதம்

முற்றும்

# இனிய செந்தமிழ் நூல்கள்

சிறந்த நூல்கள்! குறைந்த விலை!!

சொற்ப பிரதிகளே இருப்பதால் பின் இல்லையென்று ஏமாறாமல் வேண்டியவைகளை உடனே வாங்கி வாசித்து ஆனந்தமடையுங்கள்.

| | ரூ ச | | ரூ ச |
|---|---|---|---|
| ராஜராஜேஸ்வரி | 1–50 | சங்கீதசுரபூஷணி | 75 |
| வஜ்ரலேகா | 1–25 | சங்கீத அனுபவ சிந்தாமணி | 75 |
| அம்பலத்தரசன் | 1–25 | சங்கீத ஞானபூஷணி | 3–00 |
| மாணிக்கவல்லி | 1–00 | சங்கீத சில்லரைக் கோர்வை | 3–00 |
| புஷ்பாவதி | 62 | சங்கீத சிந்தாமணி | 3–00 |
| அஞ்சனவதி | 1–25 | திராவிட கானம் | 3–00 |
| நீலஅறையில் அதிசயம் | 62 | ராமுலு கீர்த்தனங்கள் | 1–25 |
| தியாகராஜன் | 62 | ஆர்மோனிய அனுபவசங்கீர்த் | 1–00 |
| அம்பலவாணன் | 1–25 | 50 இன்பரசக்கோவை [தனம் | 1–25 |
| அங்கயற்கண்ணி | 1–75 | 100 ஷை | 2–00 |
| மதனகாந்தி | 1–50 | 200 சில்லரைக்கோவை | 1–50 |
| ஏமகாதன் | 50 | கீர்த்தனைக்கொத்து | 1–50 |
| தடிராமன் | 38 | வைத்திய சில்லரைக்கோர்வை | 1–50 |
| அண்டப்புளுகன் | 50 | சோதிடச்சில்லரைக்கோர்வை | 2–50 |
| திடீர்புளுகன் | 38 | சோதிடஅரிச்சுவடி 4 பாகம் | 1–00 |
| கலியுகப்புழுகன் | 50 | பெரிய வருஷாதி நூல் | 1–00 |
| சரோஜினி | 2–00 | சாதகாலங்காரம் | 2–00 |
| ஜடாவல்லவர் | 2–50 | சாதக சிந்தாமணி | 3–00 |
| ஹிமார்ச்சுலை | 50 | சோதிடக்களஞ்சியம் | 2–00 |
| குடும்பவினோதக்கதைகள் | 2–00 | சோதிடப்பிரச்ஞானதீபிகை | 2–00 |
| அராபிக்கதை | 3–00 | திருக்குறள்உரை | 4–00 |
| ஸ்ரீ ராமர்அஸ்வமேதயாகம் | 2–50 | நாலடியார் உரை | 1–00 |
| விக்கிரமாதித்தன் கதை | 1–50 | திருவாசகம் | 1–00 |
| ஷை காலிக்கோ | 2–00 | கைவல்லியஉரை | 1–00 |
| மதனகாமராஜன்கதை | 75 | போகர் 7000 | 4–00 |
| விறலிவிடுதூது | 75 | சப்தரிஷிவாக்கியம் | 4–00 |
| சரீரமர்மசாஸ்திரம் | 1–00 | சோதிட ஆசிரியன் | 1–00 |
| விராடபர்வம் | 1–50 | ஆங்கிலஆசான் | 2–00 |
| இராமாயணவசனம் | 5–00 | கந்தலீலை | 1–00 |
| ஸ்ரீ மஹாபாரதவசனம் | 10–00 | முதலிய புஸ்தகங்களும் | |

மற்றும் சகலவிதமான புத்தகங்களும் விற்பனைக்குத் தயாராய் இருக்கின்றன. உள்ளூரவர்கள் நேரிலும், வெளியூரவர்கள் வி. பி. யிலும் பெற்றுக் கொள்ளலாம். புத்தகங்களின் விலைவிபரமடங்கிய கேட்லாக் வேண்டுவோருக்கு இனமாய் அனுப்புவோம்.

**சரஸ்வதி புத்தகசாலை,**

63, ஜிந்தும்பிட்டித் தெரு, கொழும்பு.

கிளை ஆபீஸ்:- 70, செட்டித்தெரு, கொழும்பு.